**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 05.01.2026 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் ஞாயிற்றுக் கிழமை குஜராத் மாநிலம் **சோம்நாத்** செல்ல இருக்கிறார்.

**விக்சித் பாரத்- ஜி ராம் ஜி சட்டம்**, பழைய **வேலை உறுதியளிப்பு திட்டத்**தில், **வெளிப்படைத் தன்மை**யை கொண்டு வந்து இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில், நாட்டின் **மின்னணு உற்பத்தி**, 6 மடங்கு அதிகரித்து இருப்பதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் **பொங்கல் பரிசுத் தொகுப்பு** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

-----------------------------

மோடி சோம்நாத் (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் ஞாயிற்றுக் கிழமை குஜராத் மாநிலம் சோம்நாத் செல்ல இருக்கிறார். **சோம்நாத் கௌரவ திருவிழா**வை குறிக்கும் வகையில், சோம்நாத்தில், ஓராண்டு காலம் பல்வேறு செயல்பாடுகளுக்கு திட்டமிடப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். வரும் 8 முதல், 11ஆம் தேதி வரை நடைபெற உள்ள ஆன்மீக மற்றும், சமுதாய செயல்பாடுகளும் இதில் அடங்கும். வரலாற்று காலத்தில் மீண்டும், மீண்டும் மொகலாயர் தாக்குதலுக்கு ஆளான சோம்நாத் கோவில், முதல் முறை தாக்கப்பட்டதன் ஆயிரமாவது ஆண்டாக, நடப்பு 2026ஆம் ஆண்டு அமைவதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*மோடி கோவில் 1 (6)*

குஜராத் மாநிலத்தின் சோமநாதர் ஆலயம், எதிரிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள், மற்றும், காலனி ஆட்சியாளர்களின் கொள்ளைகளையும் மீறி, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தலை நிமிர்ந்து நிற்பது, எவராலும் வெல்ல முடியாத இந்திய நாகரீக உணர்வின் பிரதிபலிப்பு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இதுதொடர்பாக பிரதமர் எழுதியுள்ள கட்டுரை குறித்து ஒரு தொகுப்பு….

**(வாய்ஸ்)**

*மோடி கோவில் 2 (18)*

**(வாய்ஸ்)**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஆயிரத்து 26ஆம் ஆண்டு ஜனவரியில்தான், காட்டுமிராண்டித் தனமான படையெடுப்பு மூலம் சோமநாதர் கோவிலை அழிக்க முதல் முறையாக கஜினி முகமது முயன்றதை பிரதமர் திரு. நரேநதிர மோடி தமது கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். சோமநாதரின் கதை, நாட்டின் கலாச்சாரத்தை பாதுகாப்பதில், பாரத மாதாவின் எண்ணற்ற குழந்தைகள், பல்லாயிரம் ஆண்டுகளாக காட்டி வரும் அசைக்க முடியாத துணிச்சலின் கதையே தவிர, வெறும் கோவிலின் கதை அல்ல என்று, அவர் கூறியுள்ளார். இந்தியர்களின் இதே உணர்வுதான், தற்போது நாட்டின் எல்லாத் துறைகளிலும் வெளிப்பட்டு வருவதாகவும், இந்திய இளைஞர்களின் புதுமையாக்கத் திறன்கள் மீது முதலீடு செய்ய, உலக நாடுகள் விரும்புவதற்கு இதுவே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கலை-கலாச்சாரம், இசை, மற்றும், திருவிழாக்கள், தற்போது உலக அளவிற்கு உயர்ந்து வருவதையும், ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்பதை இந்தியாவின் யோகா, மற்றும், ஆயுர்வேதம், உலகிற்கு எடுத்துக்காட்டி வருவதையும் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். உலகின் சிக்கலான பல பிரச்சனைகளுக்கு, இந்தியாவில் இருந்து தான் தீர்வுகள் உருவாகி வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

*மோடி கோவில் 3 (3)*

சோமநாதர் ஆலயம் பல தாக்குதல்களை முறியடித்து, தலை நிமிர்ந்து நிற்க

முடியும் என்றால், நாடும், இழந்த பெருமையை மீட்டெடுக்க முடியும் என்று, பிரதமர் மேலும் கூறினார்.

-----------------------------

*சோம்நாத் பிஜேபி* (16)

சோமநாதர் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதோடு, நாட்டின் முதலாவது குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் வெளியிட்ட தொலை நோக்குப் பார்வை, தற்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில்தான் நிறைவேறும் கட்டத்தை எட்டி இருப்பதாக, பிஜேபி கூறியுள்ளது. அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் டாக்டர் சுதான்ஷூ திரிவேதி, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், சோமநாதர் ஆலயத்தின் தாக்குதலுக்கு முன்பு, நாட்டில் நிலவிய சுபிக்க்ஷம் மீண்டும் வரும்போதுதான், ஆலயத்தின் குடமுழுக்கு முழுமை பெறும் என டாக்டர் ராஜேந்திர பிரசாத் கூறியது போலவே, தற்போது நாடு, செழிப்பை நோக்கி முன்னேறி வருவதாகவும், உலகின் 4ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா திகழ்வதாகவும் கூறினார். 1951ஆம் ஆண்டு, அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் எதிர்ப்பையும் மீறித்தான், சோமநாதர் ஆலயம் புதுப்பிக்கப் பட்டதாக, திரு. திரிவேதி கூறினார். கஜினி முகமது மத நோக்கம் இல்லாத கொள்கைக்காரன் என்றுதான், நேரு தனது டிஸ்கவரி ஆஃப் இண்டியா நூலில் கூறி இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

-----------------------------

*ஷிவ்ராஜ் சௌகான்* (11)

கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பு, மற்றும், வாழ்வாதாரத்திற்கு உறுதி அளிக்கும் வகையிலான, **விக்சித் பாரத்- ஜி ராம் ஜி சட்டம்**, முந்தைய **மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்**தில், வெளிப்படைத் தன்மையை கொண்டு வந்து இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார். புதிய திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கான வேலை நாட்களின் எண்ணிக்கை, 125ஆக நீட்டிக்கப் பட்டுள்ளதாக, இன்று ஈரோட்டில், விவசாயிகளிடையே பேசுகையில் அவர்

கூறினார். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கூலித் தொகை, உரிய காலத்திற்குள் வழங்கப்படும் என்றும், பணி செய்து 15 நாட்களுக்குள் கூலித் தொகை வழங்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அதோடு விவசாயிகள் தொடர்ந்து பயன்பெறும் வகையில், கிராமப்புற உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்படும் என அமைச்சர் மேலும் கூறினார்.

-----------------------------

*ராதாகிருஷ்ணன்* (13)

இவ்வாண்டு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கும் என்சிசி மாணவர்களுக்கு, தற்போது புதுடெல்லியில் நடைபெறும் சிறப்பு முகாமில், இன்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உரையாற்றினார். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில், தேசிய மாணவர் படையினர் பாராட்டத்தக்க முறையில் பங்களித்ததாக அவர் தெரிவித்தார். இந்தியாவின் தேசிய மாணவர் படை, உலகின் மிகப் பெரிய சீருடை இளைஞர் அமைப்பாக திகழ்வதையும், மலையேற்றம், சாகசச் செயல், பேரிடர் மீட்பு, இளைஞர் பரிமாற்றம் போன்ற பல்வேறு துறைகளில் என்சிசி மாணவர்கள் சிறப்பான சாதனைகளை எட்டி இருப்பதையும், குடியரசுத் துணைத் தலைவர் பாராட்டினார். சைபர் தாக்குதல்கள், மற்றும், ட்ரோன் தாக்குதலை எதிர்கொள்வதற்கான தயார் நிலையிலும், தற்போது என்சிசி மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் படுவதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

-----------------------------

*வைஷ்ணவ் 1* (5)

கடந்த 11 ஆண்டுகளில், நாட்டின் மின்னணு உற்பத்தி 6 மடங்காகவும், மின்னணு பொருட்கள் ஏற்றுமதி 8 மடங்காகவும், அதிகரித்துள்ளதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சமூக ஊடகத்தில் அமைச்சர் வெளியிட்டுள்ள பதிவு குறித்து கூடுதல்

விவரங்கள்…..

**(வாய்ஸ்)**

*வைஷ்ணவ் 2* (16)

**(வாய்ஸ்)**

2025ஆம் ஆண்டில் ஆப்பிள் நிறுவனம் 50 பில்லியன் டாலர் மதிப்பிலான கைப்பேசிகளை இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்திருப்பதாகவும், இதனால், இந்தியாவின் ஏற்றுமதிப் பட்டியிலில், முதல் 3 இடங்களுக்கு, மின்னணுப் பொருட்கள் உயர்ந்து இருப்பதாகவும், அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். நாட்டில் தற்போது, 46 **மின்னணுக் கூறு உற்பத்தி நிறுவன**ங்கள் செயல்பட்டு வருவதாகவும், இதனால், உற்பத்திப் பொருளாதாரத்தின் முக்கிய உந்து சக்தியாக, **மின்னணு பொருள் உற்பத்தி** மாறி இருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் இவ்வாண்டு **மேலும் 4 செமி கண்டக்டர் தொழிற்சாலை**கள் வணிக ரீதியிலான உற்பத்தியை தொடக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மின்னணுத் துறையில் தற்போது 25 லட்சம் பேர் பணியாற்றி வருவதாகவும், பல தொழிற்சாலைகள் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களை ஒரே இடத்தில் பணியமர்த்தி இருப்பதாகவும், அவர் கூறியுள்ளார். எதிர்காலத்தில் **மின்னணு உற்பத்தி மற்றும் வினியோகச் சங்கிலி**யின் எல்லா அம்சங்களிலும் முக்கிய சக்தியாக இந்தியா மேம்படும் என்றும், அமைச்சர் கூறியுள்ளார்.

-----------------------------

*கடலோரக் காவல்* (20)

கடல் மாசுபாட்டை கட்டுப்படுத்தி, கடல்சார் பல்லுயிர்ச் சூழலைப் பாதுகாக்கும் வகையில், 70 சதவிகித உள்நாட்டுப் பங்களிப்புடன் இந்தியாவிலேயே கட்டப்பட்ட **ICG சமுத்திர பிரதாப்** கப்பலை, இன்று கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முறைப்படி கடலோரக் காவல் படையில் சேர்த்து வைத்தார். பருவநிலை மாற்றத்தால் பல சவால்கள் ஏற்பட்டு வரும்

நிலையில், **கடல்சார் பல்லுயிர்ச் சூழல் பாதுகாப்பு**, நம் அனைவருக்கும் **தார்மீகக் கடமை** என்று, நிகழ்ச்சியில் பேசுகையில், பாதுகாப்பு அவர் கூறினார். எண்ணெய்க் கசிவு உள்ளிட்ட கடல் மாசுபாட்டு அம்சங்களை கண்டறிந்து போக்கும் பணிகளுக்கு அப்பாற்பட்டு, நாட்டின் கடல் ரோந்துப் பணிகளையும், தேடுதல், மற்றும், மீட்புப் பணிகளையும் வலுப்படுத்தும் வகையில் இக்கப்பல் அமைந்து இருப்பதாக அவர் தெரிவித்தார். புதிய கப்பலில், 2 பெண் அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். இந்தியத் தொழில் துறையினர் எதிர்காலத்தில் இத்தகைய கப்பல்களை, முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கும் நிலைக்கு உயர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். 114 மீட்டர் நீளமுள்ள **ICG சமுத்திர பிரதாப்** கப்பலில், ஹெலிகாப்டர்களை நிறுத்தி வைக்கும் வசதி உட்பட, பல்வேறு நவீன வசதிகள் இடம்பெற்றுள்ளதும், சுயசார்பின் நோக்கிய இந்தியாவின் பயணத்தில், முக்கியச் சின்னமாக இக்கப்பல் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*அமித் ஷா-திருச்சி* (9)

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, இன்று திருச்சியில், கட்சித் தொண்டர்களுடன் பொங்கல் கொண்டாடினார். நம்ம ஊரு மோடி பொங்கல் என்ற பெயரில், மாநில பிஜேபி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இந்த கலாச்சாரத் திருவிழாவில், ஆயிரக்கணக்கிலான பெண்களும் பங்கேற்றனர். விழாவிற்கு வந்த மத்திய உள்துறை அமைச்சருக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. சூரிய கடவுளை அவர் வழிபட்டு, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில், மற்றும், திவானைக்காவல் அகிலாண்டேஷ்வரி அம்மன் கோவிலிலும் தரிசனம் செய்தார்.

----------------------------

*புதுச்சேரி பொங்கல்* (14)

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், பச்சரிசி, நாட்டு

சர்க்கரை, பாசிப்பருப்பு, நெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகிய 5 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். திலாஸ்பேட்டை நியாய விலைக் கடையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி ரமேஷ், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் கீழ், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், மொத்தம் 3 லட்சத்து 47 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுவதாக அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*புதுச்சேரி கண்காட்சி* (8)

புதுச்சேரியில், பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, மண்டல அறிவியல் கண்காட்சி, கதிர்காமம் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், நாளை தொடங்க உள்ளது. நிலையான எதிர்காலத்திற்கான அறிவியல்-தொழில்நுட்பம் என்ற கருப்பொருள் அடிப்படையிலான இக்கண்காட்சியில், புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மற்றும், மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், 400க்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்த உள்ளனர்.

-----------------------------

*புத்தக வெளியீடு* (9)

2014 முதல், 2025ஆம் ஆண்டு வரையிலான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சுதந்திர தின உரைகளின் தொகுப்பாக, தேசிய உருது மொழி மேம்பாட்டு சபையால் பதிப்பிக்கப்பட்டுள்ள, **காத்பாத்-இ-மோடி** என்ற உருது புத்தகத்தை, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், புதுடெல்லியில், இன்று வெளியிட்டார். இந்நூலில்

இடம்பெற்றுள்ள திரு . பிரதமரின் உரைகள், **அனைவருக்கும் ஆதரவு- அனைவருக்கும் வளர்ச்சி- அனைவருக்கும் நம்பிக்கை,** என்பதை வெளிப்படுத்தும் வகையிலும், **ஸ்வச் பாரத், அந்த்யோதயா** போன்ற தேசிய நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகவும், அமைந்து இருப்பதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

-----------------------------

*ஐ.நா (12)*

வெனிசுலாவில், அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க, ஐநா பாதுகாப்பு கவுன்சில் இன்று அவசர கூட்டம் நடத்துகிறது. நிரந்தரம் இல்லாத உறுப்பு நாடான கொலம்பியா விடுத்த கோரிக்கையின் பேரில், இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. வெனிசுலா அதிபர் திரு. நிக்கோலஸ் மதுரோ, அமெரிக்க ராணுவ நடவடிக்கையின் மூலம் கைது செய்யப்பட்டு இருப்பது, ஆபத்தான முன்னுதாரணம் என்று ஐநா பொது செயலர் திரு. அன்டோனியா குட்டரேஸ் கூறியுள்ளார். சர்வதேச சட்டவிதிகள் முறையாக பின்பற்றப்படவில்லை என்பது குறித்து ஐநா பொது செயலர் ஆழந்த கவலை அடைந்து இருப்பதாக, ஐநா பொது செயலரின் செய்தி தொடர்பாளர் திரு. ஸ்டிஃபான் துஜாரிக் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*ஜல் சக்தி* (13)

கங்கை நதியை சுத்தப்படுத்துவதற்கான நமாமி கங்கே திட்டத்தின் கீழ், கரையோரப் பகுதிகளில் மாசுப்பாட்டை குறைப்பதற்கான 15 உள்கட்டமைப்புத் திட்டங்கள், கடந்த ஓராண்டில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளதை, மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் பாராட்டியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, அமைச்சகத்தின் 17ஆவது பணிக்குழுக் கூட்டத்திற்கு தலைமையேற்று பேசிய அவர், கழிவு நீரை சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் மீண்டும் பயன்படுத்துவது குறித்த தேசிய கொள்கைக்கு ஏற்ப, கங்கை கரையோர மாநிலங்கள்,

இது தொடர்பான எல்லா திட்டங்களையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார். நமாமி கங்கே திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த கண்காணிப்பு வசதிகள், மற்றும், தரவுகளின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கான வசதிகளை வலுப்படுத்துவது குறித்து, பணிக்குழுவின் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் ஞாயிற்றுக் கிழமை குஜராத் மாநிலம் **சோம்நாத்** செல்ல இருக்கிறார்.

**விக்சித் பாரத்- ஜி ராம் ஜி சட்டம்**, பழைய **வேலை உறுதியளிப்பு திட்டத்**தில், **வெளிப்படைத் தன்மை**யை கொண்டு வந்து இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில், நாட்டின் **மின்னணு உற்பத்தி**, 6 மடங்கு அதிகரித்து இருப்பதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் **பொங்கல் பரிசுத் தொகுப்பு** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**